# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 65 /2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 2 | நாள் | 30.08.2024 |
| பெயர் | கதிரவன் | ஜாதி | |
| தந்தை பெயர் | தங்கதுரை | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

(1முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி Recall செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எங்கள் வீட்டை சுற்றி எங்கள் உறவினர்கள் உள்ளார்கள் என்றால் சரியல்ல. எங்கள் தெருவில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரி. என் வீட்டை சுற்றி உள்ளவர்களுக்கும் எங்களுக்கும் எதாவது விரோதம் உள்ளதா என்றால் இல்லை. என் தம்பி பாட்டாளி மக்கள் கட்சயில் ஒன்றிய செயலாளராக இருந்தார் என்றால் சரி. நான் எந்த கட்சியிலும் இல்லை. என் அப்பாவிற்கு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் நல்ல மரியாதை கொடுத்தார்கள் என்றாலும் அவர் சொன்னால் கட்டுப்படுவர்கள் என்றாலும் சரி. செல்வராஜ் என்பவர் என் சித்தப்பா என்றால் சரி. இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு செல்வராஜ் எங்கள் குடும்பத்தினர் மீது புகார்கொடுத்திருக்கிறார் என்றாலும் நீண்ட காலமாக எங்கள் குடும்பத்திற்கும் அவருக்கும் பிரச்சனை உள்ளது எ்னறால் சரி. என் அப்பா மீதும் என் தம்பி மீது அவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரி. கட்சியில் இருந்ததால் என் தம்பி மீது பல வழக்குகள் இருந்தது என்றால் தவறு. எங்கள் ஏரியாவில் நாங்கள் நல்ல செல்வாக்கான குடும்பம் என்றால் சரி. எங்களுக்கு நிறைய நிலபுலங்கள் சொத்துகள் உள்ளது என்றால் சரி. இரண்டு ஓட்டு வீடு, ஒரு சீட்டு

போட்ட வீடு, ஒரு மாடி வீடும் எங்கள் குடும்பத்திற்கு சொந்தமாக உள்ளது. சம்பவத்திற்கு முன்பு என் பெரிய சகோதரர் காளிமுத்து என் அப்பாவை அடித்து என் அப்பாவிற்கு கை உடைந்து விட்டது என்றால் சரி. என் அப்பாவிற்கு சிறுநீரக பிரச்சனையால் திருச்சி ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில்சிகிச்சை பெற்றுக்கொண்டார் என்றால் அதெல்லாம் இல்லை. என் சகேதரர் காளி முத்து பெயரில் வேறு சில வழக்குகள் ஏற்பட்டது என்றால் சரி. என்னுடைய மற்றொரு தம்பி உதயசங்கர் மீது விபத்து வழக்கு தான் உள்ளது. SC, ST வழக்கு இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் எங்கிருந்தேன் என்றால் ஓட்டு வீட்டில் இ ருந்தேன். என் அம்மா அப்பாவை வெட்டுகிறார்கள் பைப்பால் அடிக்கிறார்கள் என்று கத்தினார் நான் ஓடினேன். நான் போய் பார்த்தபோது என் அப்பா காயமாகி கிடந்தார் என்றால் சரி. என்னுடைய வீட்டில் அப்போது என்னுடன் யார் இருந்தது என்றால் நானும் என் மனைவி சுபாவும் என் பசங்களும் இருந்தோம். அனுசுயா அப்போது எங்கிருந்தார் என்றால் மாடி வீட்டிற்கு பின்னாடி உள்ள ஓட்டு வீட்டில் இருந்தார். அவரும் சத்தம் கேட்டுதான்நான் ஓடி வந்த பிறகு அங்கு ஓடி வந்தார் என்றால் சரி. என் அப்பாவை வெட்டியது புது வீட்டிற்கு மேற்கில் உள்ள காலி மனைக்கட்டில். சம்பவத்தின்போது மாடி வீட்டின் வாசலில் பேசிக்கொண்டிருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு கொஞ்ச நேரத்திற்கு முன்பு பேசிக்கொண்டிருந்தோம். அதன்பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். என் அப்பா எங்கு போனார் என்றால் என் அம்மா என் அப்பாவை பழைய வீட்டிற்கு அழைத்து போனார். போலிசார் என்னை சம்பவத்தன்று விசாரிக்கவில்லை. எனக்கு அடிபட்ட பிறகு மயங்கி விழுந்து விட்டேன் அதன்பிறகு என் அப்பாவை காரில் மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். என்அப்பாவை யார் காரில் மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம் என்றால் நான் எனது தம்பி, ராமமூர்த்தி, ரமேஷ், ஸ்டாலின், சுப்ரமணியம் ஆகியோர் அழைத்து வந்தோம். போலிசார் மருத்துவமனையில் விசாரித்தபோது நான் மயக்கமாக இருந்தேன். அதனால் போலிசாரிடம் நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரி. அன்று நான் எதுவும் சொல்லவில்லை. நான் எத்தனை நாட்கள் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தேன் என்றால் சுமார் 12 நாட்கள் என்று நினைக்கிறேன். எதிரி சரவணன் சம்பவத்தன்று மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரி. அவர் 16 நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றால் தெரியவில்லை. நான் ஆஸ்பத்திரியில் அட்மிட்

ஆகி 10 நிமிடத்தில் போலிசார் அங்கு வந்து விட்டார்கள் என்றால் சரி. என் அம்மாவையும் அனுசுயாவையும் யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல அம்மாவை அடித்தது தெரியாது. அப்போது மயக்கத்தில் இருந்தேன் அனுசுயாவை கல்லால் சரவணன் அடித்தார். சம்பவத்திற்கு முன்பு எனக்கும் எதிரிகளுக்கும் எந்த விரோதமும் இல்லை என்றால் சரி. எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பவத்திற்கு முன்பு எந்த விரோதமும் இல்லை என்றால் எனது சித்தப்பா வீட்டு நிலத்தை ஓட்டுவது சம்பந்தாக பிரச்சனை இருந்தது. அதை தவிர வேறு பிரச்சனை இல்லை என்றால் சரி. நிலப்பிரச்சனைக்கு முன்பாக சரவணன் எங்கள் வீட்டிற்கு வருவார் சாப்பிடுவார் என்றால் எப்போதாவது வருவார். சக்கரவர்த்தி குடும்பத்திற்கு எங்கள் ஊரில் எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 10 மா உள்ளது. எத்தனை ஏக்கர் என்றால் 3 ஏக்கர் சொச்சம் உள்ளது. அதில் 1 ஏக்கர் என் அப்பா வாங்கி கொடுத்தார். என் அப்பாவும் சக்கரவர்த்தியும் அன்பாக ஆதரவாக இருந்தார்கள்என்றால் அப்போதெல்லாம் நன்றாக இருந்தார்கள். எங்கள் குடும்பம் அந்த இடத்தில் நல்ல வலிமையான குடும்பம் என்றால் சரி. எதிரிகளுக்கு அந்த நிலத்தை தவிர வேறு வசதி இல்லை என்றாலும் சாதாரண குடும்பம் என்றால் சரி. எதிரிகளின் நிலம்இருக்கும் இடத்தில் இருந்து எதிரிகளின் வீடு சுமார் 3 கிமீ தூரத்தில் உள்ளது என்றால் சரி. அவர்கள் இருப்பது வடவஞ்சேரி. நாங்கள் இருப்பது கடுவங்குடி. எதிரிகள் சாதாரண குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதால் எங்களை அடித்து காயப்படுத்தி விட்டு போக முடியாது என்றால் தவறு. என் தம்பி நிவாஸ்க்கும் எதிரிகளுக்கும் தவிர என் குடும்பத்தினருக்கும் எதிரிகளுக்கும் எந்த முன்விரோதமும் என் அப்பாவை கொலை செய்யும் அளவிற்கு எந்த முன்னேற்பாடும் இல்லை என்றால் சரி. என் தம்பி நிவாஸ்க்கும் சக்கரவர்த்திக்கும் முதல் நாள் சண்டை என் அப்பாவை எப்படி அடித்தாய் என்று கேட்டுதான் வந்து தகராறு செய்து என் அப்பாவை வெட்டிவிட்டார்கள். எதிரிகள் வண்டியில்வந்தபோது யார் யார் என்ன ஆயுதங்கள் வைத்திருந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றால் சரி. ஓடும்போது கையில் வைத்திருந்த ஆயுதங்களை பார்த்தேன். நான் சொல்வது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், சரவணனை நானும் என் தம்பியும் அடித்து விட்டதால் நியாயம் கேட்பதற்காக சக்கரவர்த்தி என் அப்பாவை பார்க்கவந்தார் என்றாலும் சரவணன் அதற்கு முன்பே அடிபட்டு மருத்துவமனைக்கு போய்விட்டார் என்றால் சரியல்ல. என் அப்பா

சக்கரவர்த்தியை ஏன் அடித்தாய் என்று தங்கதுரை தனது மகன் நிவாஸை கேட்டதால் எனது அப்பாவிற்கு எனது தம்பிக்கு ஏற்பட்ட தகராறில் எங்கள் அனைவருக்கும் காயம் ஏற்பட்டது என்றாலும் எதிரிகளுக்கும் இந்த காயங்களுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நம்பியார் - லதா அவர்களது நிலத்தை சக்கரவர்த்தி நிலததையும் நாங்கள் ஓட்ட வேண்டுமென்று நினைத்து பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.